நகர் ஊரமைப்பு துறை(DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
வேலம்பநாயக்கன்வலசு ஊராட்சி

திருப்பூர் மாவட்டம்,காங்கயம் வட்டம்,வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியம்,வேலம்பநாயக்கன்வலசு ஊராட்சி மற்றும்
சேனாபதிபாளையம் கிராமம் ரீ.ச.எண்:885/1–ல் அமையும் உத்தேச குடிமிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

அளவு :1:500(1செமீ=5மீ) (திட்டமில்லா பகுதி)

இணைவழி விண்ணப்ப எண்:OABY7VT7 , நாள்:27-12-2022



பா.ஜெயராணி
அளவர்/உதவி வரைவாளர்

க.பத்மா
மேற்பார்வையாளர்

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 5.00ஏக்கர் (அ) 20250.00ச.மீ
ஒதுக்கிய மனைகள் EWS மனைகளையும் சேர்த்து : 89
EWS மனைகள்

(i) EWS மனைகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு — (மனைப்பிரிவின் பரப்பு–மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)X(10/100)
(20250.00 ச.மீ– 6442.24 ச.மீ) X (10/100) = 1380.78 ச.மீ

(ii) EWS மனைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளின் பரப்பு (EWS மனைஎண்கள்:[62-74,75-87]) = 1440.02 ச.மீ (10.43 %)

மனைப்பிரிவின் எல்லை
நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள்:(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I. மனைப்பிரிவு சாலை பரப்பு மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு :6442.24 ச.மீ.

II.ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு :[மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு]X10%
[20250.00 ச.மீ – 6442.24ச.மீ] X 10% =1380.78 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 1397.22 ச.மீ = 10.12 %

III.பொது உபயோகம்

(A)LOCALBODY க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = [மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு]X10%
[20250.00 ச.மீ–6442.24ச.மீ] X 0.5/100% =69.04 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 71.07 ச.மீ = 0.51 %

(B) TANGEDCO க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = [மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு]X10%
[20250.00 ச.மீ–6442.24ச.மீ] X 0.5/100% = 69.04 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 71.44 ச.மீ = 0.52 %

கட்டிட வரம்பு :

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ–ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ–ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு :

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ–ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1.அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020 (ம) நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.அரசாணை எண். 181, வீட்டுவசதிவாரியம் மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020–ன் படி உத்தேச குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி,தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

3.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், தலைவர்,வேலம்பநாயக்கன் வலசு ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4.நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்குண்டான மனைப்பிரிவுகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம்,விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீx1.2மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

7.உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

8.நலிவடைந்த பிரிவினருக்காக (EWS)மனைகள்(62–74,75–87)-ஆகியவற்றை மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற மூன்று வருடங்களுக்குள் மனைஒருங்கினைப்பு செய்யக் கூடாது.

9.உத்தேச மனைப்பிரிவு இடத்தில் செல்லும் குறைந்த அழுத்த மின்கம்பி பாதையை,மனைப்பிரிவு உத்தேச சாலை போக்கிற்கேற்ப மனதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO : 78/2023

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2023.03.09 13:35:20